# 68 ஆவது ஆண்டு

# ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா அழைப்பிதழ்

**05-11-2021** முதல் **11-11-2021** முடிய




இடம்: N K T முத்து ஹால்,
4, T P கோயில் 2 வது சந்து, ஐஸ் ஹவுஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை - 600005

## சிறப்பு நிகழ்ச்சிகள்

- ஆறுமுக லக்ஷார்ச்சனை / த்ரிசதி
- வேத பாராயணம்
- திருப்புகழ், பக்திப் பாடல்கள் இன்னிசை
- ஸ்ரீ அருணகிரிநாதர் விழா
- ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா
- தேவசேனா வள்ளி கல்யாணம்

ஆடும்பரி



வேல்



அணிசேவல்

எனப் பாடும் பணியே பணியா அருள்வாய்

இன்பம் தந்து உம்பர் தொழும் பத
கஞ்சம் தம் தஞ்சம் எனும் படி
என்றென்றும் தொண்டு செயும்படி அருள்வாயே

## முருகன் திருவருட் சங்கம்

சென்னை-600005 ☎ 044-2854 4713

ஸ்ரீ மதலைமலை கிழவன் அநுபவன் அபயன் உபய சதுர்
மறையின் முதல் நடு முடிவின் மணநாறு சீறடியே

(சீர்பாத வகுப்பு)

# 68 ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா




## 5-11-2021 வெள்ளிக்கிழமை முதல் 11-11-2021 வியாழக்கிழமை முடிய

விழா நடைபெறும் இடம் :

## N.K.T. முத்து ஹால்

4, T.P. கோயில் 2ஆவது சந்து, ஐஸ் ஹவுஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
கைப்பேசி : 98417 38069

ஸ்ரீ மலைக்கு உரியவனும், குறிஞ்சி நில அதிபதியும், எல்லா உயிர்களுக்கும் அநுபவ சாக்ஷியாக உள்ளவனும், பயத்தை அழித்து ஆறுதல் அளிப்பவனுமாகிய முருகப் பெருமானின் நான்கு வேதங்களின் அனைத்து பாகங்களிலும், அவனது திருவடிகள் இரண்டும் அருள் மணம் கொழிக்கின்றன.

அதிபதி எனவரு பொரு திறல் முருகனை
அருள் பட மொழிபவர்
ஆராய்ந்து வணங்குவர் தேவேந்திர சங்கமே

(தேவேந்திர சங்க வகுப்பு)

---

உ
முருகா சரணம்

# முருகன் திருவருட் சங்கம்

101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
ஸ்தாபிதம் : 1954 தொலைபேசி : 2854 4713

ஆனைமுகவற்கு இளைய ஐயனின் திருவருளினால் சங்கத்தின் 68ஆவது ஆண்டு **ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா 5-11-2021 வெள்ளிக்கிழமை** முதல் **11-11-2021 வியாழக்கிழமை** முடிய ஏழு தினங்கள் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட வண்ணம் திருவல்லிக்கேணி 4, துளசிங்க பெருமாள் கோயில் 2ஆவது சந்தில் அமைந்துள்ள **N.K.T. முத்து ஹாலில்** நடைபெற உள்ளது.

அடியார்கள் யாவரும் நமது சங்கத்தின் சார்பில் நடைபெறும் இந்த 68ஆவது ஆண்டு **ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா** நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுடன், **தங்களால் இயன்ற அளவு அரிசி, பருப்பு** மற்றும் **பொருளுதவிகளை** அளித்து விழா நிகழ்ச்சிகள் இனிதே நடைபெறுவதற்குத் தங்களுடைய பேராதரவினை அளித்து, வள்ளி படர்சாரல் வள்ளிமலை மேவு வள்ளி மணவாளப் பெருமானின் திருவருளினால் வாழ்க்கையில் இஹபர சௌபாக்கியத்துடனும், சகல செல்வயோக மிக்க பெருவாழ்வுடனும் வாழப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
**முருகன் திருவருட் சங்கத்தார்**

---

செந்தில் நாயகனாக விளங்குபவனும், போரில் வல்லவனுமாகிய முருகப்பெருமானை, அருள் கிட்டும் படி துதித்து வணங்குபவர்களை, தேவேந்திரனும், அவனுடைய பரிவாரங்களும், ஆராய்ந்து கண்டுபிடித்து வணங்குவார்கள்.

ஓ சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்த பகை அறுத்த எறிய உறுக்கி எழு(ம்)
அறத்தை நிலை காணும்

(வேல் வகுப்பு)

---

உ
முருகா சரணம்

# முருகன் திருவருட் சங்கம்

101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
ஸ்தாபிதம் : 1954 தொலைபேசி : 2854 4713

## நிகழ்ச்சி நிரல்

**05-11-2021** வெள்ளிக்கிழமை முதல் **10-11-2021** புதன் கிழமை முடிய ஆறு தினங்களும் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை **ஸ்ரீ வள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சுவாமிக்கு** அபிஷேக ஆராதனைகளுடன், ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம், அதோமுகம் ஆகிய ஆறுமுகங்களுக்குரிய லக்ஷார்ச்சனையும், பஜனை வழிபாடும், மாலையில் வேதபாராயணமும், இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. **7-11-2021** ஞாயிற்றுக்கிழமை காலை சூரிய நமஸ்காரமும், அதனைத் தொடர்ந்து காலை 7.30 மணி முதல் அகண்ட திருப்புகழ் பஜனை வழிபாடும் **10-11-2021** புதன்கிழமை **"மஹா ஸ்கந்த ஷஷ்டி"** அன்று காலை கணபதி ஹோமத்துடன், ஏகாதச ருத்ர ஜபமும், குமார போஜனமும், அன்னதானமும் மற்றும் **11-11-2021** வியாழக்கிழமை அன்று காலை **"ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாண வைபவமும்"** நடைபெற உள்ளன.

இங்ஙனம்
**முருகன் திருவருட் சங்கத்தார்**

---

ஓ குகனது வேலானது அளவிட்டுச் சொல்ல இயலாத அருள் சம்பந்தப்பட்ட திருப்புகழை, விருப்பத்துடன் ஓதுபவருக்கு, நெருங்கி வரும் பகைகளை, வேறுடன் களைந்து எறிவதற்கு உக்ரத்துடன் புறப்பட்டு, அங்கு தர்மத்தை நிலை பெறச் செய்யும்.

## 5-11-2021 வெள்ளிக்கிழமை

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன்<br>முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை<br>தொடர்ந்து ஈசானமுக (மேல் நோக்குதல்)<br>ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| மாலை 03.00 மணி முதல்<br>மாலை 04.00 மணி வரை | **வேத பாராயணம்** |
| மாலை 04.00 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | **திருப்புகழ்** மற்றும் **பக்தி பாடல்கள் இன்னிசை<br>ஸ்ரீ கிரிஷ். பாலாஜி தலைமையில்<br>ஸ்ரீ அமன் ஸத்யநாராயணன் ஐயர்<br>ஸ்ரீ விக்னேஷ். பிராணவ் ப்ரஸாத்<br>ஸ்ரீ N. ஸத்யநாராயணன் ஐயர்**<br>மற்றும் குழுவினர் (மும்பை) |

ஸ்ரீ அநுபவன் அநகன் அன்னியன் அமலன் அமோகன்
அநேகன் ஏகன் அபிநவன் நித்தியன்
அஞ்சல் என் ப்ரசண்ட வாகைப்புயங்களே

(புய வகுப்பு)

## 6-11-2021 சனிக்கிழமை

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து பூர்வ தத்புருஷமுக (கிழக்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| மாலை 04.00 மணி முதல்<br>மாலை 05.00 மணி வரை | **வேத பாராயணம்** |
| மாலை 05.00 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | **திருப்புகழ் பக்தி பாடல்கள் இன்னிசை**<br>**ஸ்ரீ கார்த்திக் கணேஷ் ராமன்**<br>**ஸ்ரீ M. விஜய்** - வயலின்<br>**ஸ்ரீ கோமதிசங்கர்** - மிருதங்கம் |



ஸ்ரீ ஆன்மாக்களின் இன்ப, துன்ப உணர்வை நகரச் செய்பவன். பாவம் அற்றவன், ஜீவாத்மாவை விட்டு வேறுபடாத பரமாத்மா, மலம் நீங்கிய தூயவன், இச்சை அற்றவன், பல பொருள்களாகக் காகஷிதருபவன், ஒரே நித்தியப் பொருளானவன், புதியவன், அழிவற்றவன் ஆகிய முருகப் பெருமானின் திருக்கரங்கள் பயப்படாதே என்று வெற்றியை உணர்த்துகின்றன.

ஓ வேலன் வாய்த்த திருப்புகழ் கற்றவர்
சீலம் ஏத்திய சித்தரே ப்ரசித்தரே

(சித்து வகுப்பு)

## 7-11-2021 ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| காலை 06.00 மணி | **சூர்ய நமஸ்காரம்** |
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன்<br>முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை<br>தொடர்ந்து தக்ஷிணா (தெற்கு நோக்குதல்)<br>அகோரமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 01.30 மணி வரை | **ஸ்ரீ அருணகிரிநாதர் விழா<br>திருப்புகழ் அகண்ட பஜனை வழிபாடு**<br>நிகழ்த்துபவர்கள்:<br>**முருகன் திருவருட் சங்கத்தினர்<br>திருப்புகழ், அநுபூதி, அலங்காரம்** மற்றும்<br>**வகுப்புகளிலிருந்து சில பாடல்கள்** |
| மாலை 04.00 மணி முதல்<br>மாலை 05.00 மணி வரை | **வேத பாராயணம்** |
| மாலை 05.00 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | **திருப்புகழ் பக்தி பாடல்கள் இன்னிசை**<br>குமாரி **வைஷ்ணவி லக்ஷ்மி நாராயணன்**<br>குமாரி **ப்ரியங்கா ஹரேஷ்** - வயலின்<br>**ஸ்ரீ V. பிரஸன்ன கார்த்திகேயன்** - மிருதங்கம் |



ஓ வேலாயுதக் கடவுளின் திருப்புகழைக் கற்றவரே, உண்மையில் ஞானிகள் போற்றும் சகல சித்தர்களிலும் பிரசித்தி பெற்ற மஹா சித்தர் ஆவார்.

❀ மயிலையும் அவன் திருக்கை அயிலையும் அவன் கடைக்கண்
இயலையும் நினைத்திருக்க வாருமே

(கடைக்கணியல் வகுப்பு)

## 8-11-2021 திங்கட்கிழமை

காலை 07.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை — **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து உத்திர (வடக்கு நோக்குதல்) வாமதேவமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை**

மாலை 04.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை — **வேத பாராயணம்**

மாலை 05.00 மணி முதல் இரவு 07.00 மணி வரை — **திருப்புகழ் பக்தி பாடல்கள் இன்னிசை**
திருமதி **ரமா முரளி**
குமாரி **ப்ரியங்கா ஹரேஷ்** - வயலின்
மாஸ்டர் **ஸத்ய வாகீஸ்வரன்** - மிருதங்கம்



❀ மயில் வாகனத்தையும் திருக்கரத்தில் உள்ள வேலாயுதத்தையும் அவன் கடைக்கண்களில் பெருகும் கருணை பெறும் தன்மைகளையும் தியானிக்க வருவீர்களாக.

இருவினை கெட ஒரு நிரமய பரம மவுனம் தரும்
இன்பம் தேக்கிய அன்பின் சிவலோகமே

(சிவலோக வகுப்பு)

## 9-11-2021 செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன்<br>முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை<br>தொடர்ந்து ஸத்யோ ஜாதமுக<br>(மேற்கு நோக்குதல்)<br>ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| மாலை 04.00 மணி முதல்<br>மாலை 05.00 மணி வரை | **வேத பாராயணம்** |
| மாலை 05.00 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | **திருப்புகழ் பக்தி பாடல்கள் இன்னிசை**<br>ஸ்ரீமதி **பவ்யா ஹரிசங்கர்**<br>குமாரி **ப்ரியங்கா ஹரேஷ்** - வயலின்<br>**ஸ்ரீ கார்த்திக் கணேஷ்ராமன்** - மிருதங்கம் |



நல்வினை, தீவினை இரண்டையும் ஒழித்து ஒப்பற்றதும், நோய்கள் அற்றதுமான மேலான ஞான நிலையைத் தருவது சிவலோகம். பேரின்ப வெள்ளம் பாயும், அன்பாகிய சிவலோகம்.

ஸ்ரீ கோலம் உறு செந்தில்நகர் மேவுகுமரன் சரண
கோகனதம் அன்போடு வணங்கு மயிலே

(மயில் வகுப்பு)

---

## 10-11-2021 புதன் கிழமை

## மஹா ஸ்கந்த ஷஷ்டி விழா

| | |
|---|---|
| காலை 06.00 மணி | **கணபதி ஹோமம்** |
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 01.00 மணி வரை | **ஏகாதச ருத்ர ஜபத்துடன்<br>முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை<br>தொடர்ந்து அதோமுக (கீழ்நோக்குதல்)<br>ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| காலை 09.00 மணி முதல்<br>முற்பகல் 11.30 மணி வரை | **திருப்புகழ், பக்தி பாடல்கள் இன்னிசை<br>ஸ்ரீமதி கோமதிஸ்ரீ குழுவினர்கள்** |
| முற்பகல் 11.35 மணி முதல்<br>பிற்பகல் 01.00 மணி வரை | **திருப்புகழ் மற்றும் வேல்மாறல் பாராயணம்<br>முருகன் திருவருட் சங்கத்தார்** |
| பிற்பகல் 01.00 மணி | **ஆறுமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனைப் பூர்த்தி<br>தொடர்ந்து குமாரபோஜனம்<br>அன்னதானம்** |
| மாலை 03.00 மணி முதல்<br>மாலை 03.30 மணி வரை | **வேத பாராயணம்** |
| மாலை 03.30 மணி முதல்<br>இரவு 05.30 மணி வரை | **முருகப் பெருமானுக்கு ஆறுவித மலர்களைக்<br>கொண்டு ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய த்ரிசதி அர்ச்சனை** |
| இரவு 05.30 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | **திருப்புகழ் இன்னிசை** - குமாரி **S. சிவப்பிரியா**<br>குமாரி **ப்ரியங்கா ஹரேஷ்** - வயலின்<br>**ஸ்ரீ M. கணேஷ் ராமன்** - மிருதங்கம் |
| இரவு 07.00 மணி முதல்<br>இரவு 07.30 மணி வரை | **திருப்புகழ் பஜனை வழிபாடு<br>முருகன் திருவருட் சங்கத்தினர்** |

---

ஸ்ரீ அழகிய திருச்செந்தூரில் விரும்பி எழுந்தருளியுள்ள குமரக் கடவுளது, திருவடித் தாமரைகளை, அன்புடன் வணங்கி நிற்கும் மயிலே, மயிலேறும் குமரன் மலரடிக்கே அடைக்கலம்.

சிவபர கிரியினில் ஒரு சிவன் வடிவொடு
திருந்த முருகோன் இருந்த கொலுவே

## 11-11-2021 வியாழக்கிழமை

காலை 07.30 மணி முதல்
பிற்பகல் 01.00 மணி வரை

**திருப்புகழில் தேவசேனா வள்ளி கல்யாணம்**
**ஸ்ரீ பாண்டுரங்க பஜனை மண்டலியினர்**
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

பிற்பகல் 03.00 மணி முதல்
மாலை 03.30 மணி வரை

**விழா நிறைவு இசை**
**முருகன் திருவருட் சங்கத்தார்**

### போஷகர்கள்

| | |
|---|---|
| ஸ்ரீ முருகா ரமணி | தியாகராயநகர், சென்னை - 600 017. |
| ஸ்ரீ பாலசந்திரன் K.N. | மேற்கு மாம்பலம், சென்னை - 600 033 |
| ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஸ்வாமிநாதன் V. | நங்கைநல்லூர், சென்னை - 600 061 |
| ஸ்ரீ சந்த்ரமௌளி P. | மந்தைவெளி, சென்னை - 600 028 |
| ஸ்ரீ வேங்கடராமன் V. | அரும்பாக்கம், சென்னை - 600 106 |
| ஸ்ரீ ஸதாசிவம் K.S. | வடபழநி, சென்னை - 600 026 |
| ஸ்ரீ அனந்த கிருஷ்ணன் N. | பங்களூரு, கர்நாடகா - 560 066 |
| ஸ்ரீ கடம்பவன ஸுந்தரம் N. | காஞ்சிபுரம், தமிழ்நாடு - 631 501 |

சிவபெருமான் திருக் கோலக்காக்ஷி போல் சிவ ஷண்முகனாய், சிறந்த முறையில் முருகன் வீற்றிருந்த காக்ஷி கொலுவினைப் போல் விளங்கிப் பொலிந்தது.

ஸ்ரீ சேவல் கொடியோடு சிகண்டியில்
மீது உற்று அறிஞோர் புகழ் பொங்கிய
தேசுக் கதிர் கோடி எனும் பதம் அருள்வாயே

**தலைவர் :**

ஸ்ரீ கணேசன் V. அபிராமபுரம், சென்னை - 600 018

**உப தலைவர் :**

ஸ்ரீ ஸுப்ரஹ்மணியன் K.V. பெசன்ட் நகர், சென்னை - 600 090.

**செயலாளர் :**

ஸ்ரீ நாராயணன் சந்த்ரசேகர் திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

**பொருளாளர் :**

ஸ்ரீ நாராயணன் V.P. மயிலை, சென்னை - 600 004.

**இணைச் செயலாளர்கள் :**

ஸ்ரீ ஸ்ரீதர் ஸுந்தரம் மயிலை, சென்னை - 600 004
ஸ்ரீ ஜானகிராமன் V. நுங்கம்பாக்கம், சென்னை - 600 034

**செயற்குழு உறுப்பினர்கள் :**

ஸ்ரீ வால்மீகி S. அபிராமபுரம், சென்னை - 600 018
ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி S. இராமாபுரம், சென்னை - 600 089
ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் V. பள்ளிக்கரணை, சென்னை - 600 100
ஸ்ரீ ராமமூர்த்தி V. மடிப்பாக்கம், சென்னை - 600 091
ஸ்ரீ விச்வநாதன் N. (Jr.) அபிராமபுரம், சென்னை - 600 018
ஸ்ரீ ஸ்ரீதரன் S. மந்தைவெளி, சென்னை - 600 028
ஸ்ரீ கணேஷ்ராமன் M. வடபழநி, சென்னை - 600 026
ஸ்ரீ மோகன் S. அபிராமபுரம், சென்னை - 600 018
ஸ்ரீ ஸுப்ரஹ்மணியன் S. தியாகராய நகர், சென்னை - 600 017
ஸ்ரீ ரெங்கநாதன் K. முகலிவாக்கம், சென்னை - 600 125

**கௌரவத் தணிக்கையாளர்**

ஸ்ரீ ஹரேஷ் S. தியாகராய நகர், சென்னை - 600 017

ஸ்ரீ சேவல் கொடியுடன், மயிலின் மீது ஏறி, ஞானிகள் பாடிய உமது புகழ் நிறைந்துள்ள ஒளியுடைய, கோடி சூரியரை ஒத்த திருவடியைத் தந்து அருள்புரிவீர்.

பைந்தார் கொடுபல ராவணன் அன்பொடு
பணிசிவ லிங்கமதைப்
பார்மிசை வைத்த விநாயகன் முக்கட்
பரமன் துணையாமே

**(சேவல் விருத்தம்)**

---

## வெண்பா

**முருகன் திருவருட் சங்கத்தில் நெஞ்சம்
உருகிப் புகுவார் தமக்குப் - பெருகுமே
அன்றே பெரும் பொருளும் ஆண்டவன் பேரருளும்
நன்றே நலம் பலவும் காண்**

- அருட்கவிமணி காமாக்ஷிதாஸர்
(ஸ்தாபகர் - முருகன் திருவருட்சங்கம்)



முருகன் திருவார் அருட்சங்கம்
மூன்று தமிழ்போல் வாழி ! என்றும்
பெருகன் புடையார் பலர் அதனைப்
பேணி வளர்ப்பர் உறுப்பினராய் ;
மருகன் மாற்கும் திருமாற்கும்
வாழ்த்த வாழ்வர் வாழவைப்போர்;
பொருகந் தஷஷ்டிப் பெருவிழாவும்
பொலிக ! வாழ்க ! வளர்க நன்றே

- அருட்கவி தவத்திரு ஸாதுராம் ஸ்வாமிகள்

**வாழ்க முருகன் திருவருட் சங்கம்**
வளர்க **பவழவிழாவினைக்** காண

வே. கணேசன், தலைவர், முருகன் திருவருட் சங்கம்

---


பசுமை தங்கிய மாலைகளைச் சூட்டி, வலிமை கொண்ட இராவணன் அன்புடன் பணிந்து வழிபட்ட சிவலிங்கத்தைப் பூமியின் கண் வைத்தவரும், தனக்கு மேல் தலைவன் இல்லாதவரும், மூன்று கண்களை உடையவரும் ஆகிய கணேசப் பெருமான் அடியேனுக்குத் துணை புரிவார்.

தத்தளிக்கு புத்தியைத்

திடப்படுத்தி ஒத்திடத்

தணிப்பு உறுத்தி மெய்த்துணைக்கு வரவேணுமே

(சிவகிரி வகுப்பு)



தடுமாறுகின்ற என் சித்தத்தைச் திடப்படுத்தி தைரியம் அளித்து, அதற்கு இசைவாக, மனச்சாந்தியை புகட்டி, சத்தியமான துணை செய்ய வரவேண்டும்.